# அன்பியத்தில் திருவருகைக்கால கொண்டாடங்கள்

**திருவருகைக்கால இளந்தளிர் வளையம்:**

**மெழுகுவர்த்திகளுடன் இணைந்த திருவருகைக் கால இளந்தளிர் வளையத்தை பொருளற்ற மற்றொரு பாரம்பரிய சடங்காக எண்ணாமல், அதன் பின்னால் உள்ள அர்த்தங்களையும் செய்திகளையும் அறிய முற்படுவோம். திருவருகைக் காலம் பற்றிய நமது புரிதலையும், சிறப்பையும் தெரிந்து கொள்வதற்காக குடும்பமாக அமர்ந்து இந்த நேரத்தைப் பயன்படுத்துவோம். நமது அன்புக்குரிய உறவுகள்-நண்பர்களோடு இணைந்து. திருவருகைக் காலம் இளந்தளிர் வளையத்தைப் பற்றி விளக்கிச் சொல்லுகின்ற கலந்துரையாடலுக்கான நேரமாக இந்த நாள்களை செலவிடுவோம். இந்த செபங்கள் ஆன்மீகத்தின் தொடுதலைத் தருகின்றன. இவ்இளந்தளிர் வளையம் நாம் அனைவரும் திருவருகைக் காலத்தை இன்னும் ஆழமான முறையில் புரிந்து கொள்ளவும், சிந்திக்கவும் உதவுகின்றது.**

**திருவருகைக் காலம் மற்றும் கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தின் போது, எல்லா இடங்களிலும் ஜன்னல்களிலும் கதவுகளிலும் அலங்கரிக்கப்பட்ட பசுமையான இளந்தளிர் வளையங்கள் தொங்குகின்றன. பல வீடுகள் மற்றும் தேவாலயங்களில் நான்கு மெழுகுவர்த்திகளால் (பொதுவாக மூன்று ஊதா மற்றும் ஒரு இளஞ்சிவப்பு) அலங்கரிக்கப்பட்ட சிறப்பு வளையங்கள் இருப்பதைப் பார்க்கலாம். திருவருகைக் காலத்தில் கொண்டாட்டங்களின் அடையாளமாக வழக்கத்தில் இருக்கின்ற ஒரு பாரம்பரியச் சின்னமே திருவருகைக் கால இளந்தளிர் வளையம் ஆகும்.**

**பாரம்பரியமாக, திருவருகைக்கால இளந்தளிர் வளையம் என்பது பசுமையான இலைகளுடன் கூடிய மரக்கிளைகளால் வட்டவடிவத்தில் செய்யப்பட்ட இளந்தளிர் வளையமாகும். இது மேற்கத்திய நாடுகளில் பெரும்பாலும் பெர்ரி மற்றும் பைன்கோன்களால் அலங்கரிக்கப்படுகிறது. பசுமையான கிளைகள் மற்றும் வட்ட வடிவம் - இவை இரண்டும் காலம் கடந்தும் தொடர்கின்ற நிலையான வாழ்வைக் குறிக்கின்றன. ஆரம்பமும் முடிவும் இல்லாத வளையத்தின் வடிவம், இயேசு நம்மீது கொண்டுள்ள முழுமையான, முடிவில்லா அன்பை பிரதிபலிக்கிறது. திருவருகைக் காலத்தில், இயேசுவின் இரண்டாம் வருகையையும், அவருடைய விண்ணக நிலைவாழ்வின் வாக்குறுதியையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.**

**நான்கு திருவருகைக்கால மெழுகுவர்த்திகள்:**

**ஒரு கிறிஸ்தவ பாரம்பரியமாக, இளந்தளிர் வளையத்தில் நான்கு மெழுகுவர்த்திகள் வைக்கப்பட்டு இருக்கும். இயேசு இருளில் ஒளியாக வருவதை மெழுகுவர்த்திகள் குறிக்கின்றன. நான்கு மெழுகுவர்த்திகளும் எரியும் வகையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வளையத்தில் இருக்கின்ற ஒரு மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது. கிறிஸ்துமஸ் நெருங்கும்போது, ஒவ்வொரு மெழுகுவர்த்தியும் இருளில் இன்னும் கொஞ்சம் வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது. கிறிஸ்மஸ் இரவு அல்லது கிறிஸ்மஸ் தினத்தன்று இயேசு நம்முடன் இருக்கிறார் என்பதை அடையாளப்படுத்தும் விதமாக இளந்தளிர் வளையத்தின் நடுவில் வெள்ளை மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது. இந்த வெள்ளை மெழுகுவர்த்தியை "கிறிஸ்து மெழுகுவர்த்தி" என்று குறிப்பிடலாம்.**

**கிறிஸ்து பிறப்பு நாளுக்கு முன் ஏற்றப்படும் மெழுகுவர்த்திகள் ஒவ்வொன்றும் திருவருகைக் காலத் தயாரிப்பின் ஒரு அம்சத்தைக் குறிக்கின்றன. திருவருகைக் கால இளந்தளிர் வளையத்தைப் புனிதப்படுத்தி ஆசீர்வாதத்துடன் தொடங்குவோம்.**

**மன்றாட்டு:**
**அன்புள்ள இயேசுவே, இந்தத் திருவருகைக் கால இளந்தளிர் வளையத்தில் நாங்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைக்கும்போது, உமது பிரசன்னத்தின் ஒளி எங்கள் இதயங்களுக்கு மகிழ்ச்சியைத் தரட்டும். எங்கள் குடும்பம் மற்றும் எங்கள் நண்பர்களை ஆசீர்வதித்து, இந்தத் திருவருகைக் காலத்தில் உமது அருள்துணை தேவைப்படுகிற அனைவருடனும் நீர் உடனிருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.**

**திருவருகைக் காலத்தின் முதல் வாரம்: டிசம்பர் 3, 2023**
**மெழுகுவர்த்தியின் பெயர்: இறைவாக்கு மெழுகுவர்த்தி**
**திருவருகைக் கால முதல் வாரத்தின் கருத்து: எதிர்நோக்கு-நம்பிக்கை**
**மெழுகுவர்த்தி நிறம்: ஊதா**

**திருவருகைக் காலத்துடன் தொடர்புடைய முதன்மை நிறம் ஊதா. கத்தோலிக்க திருச்சபைக்குள் இது தவம், தயாரிப்பு மற்றும் தியாகத்தைக் குறிக்கிறது. திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில், நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இயேசுவின் வருகையை முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை நாம் நினைவுகூருகிறோம்.**

**முதல் ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கவும்.**

**இறைவார்த்தை:**
**காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. (எசாயா 9:2)**

**மௌனமாகச் சிந்திப்போம்.**

**மன்றாட்டு:**
**அன்புள்ள இயேசுவே, குழப்பமான உலகில் நீரே எங்கள் நம்பிக்கையாக இருக்கிறீர். இந்தத் திருவருகைக் காலம், வேகத்தைக் குறைக்கவும், உங்கள் குரலைக் கேட்கவும், உண்மையாகவே முக்கியமானவற்றில் கவனம் செலுத்தவும் எங்களுக்கு உதவி செய்தருளும். கிறிஸ்மஸ் அன்று உமது பிறப்பைக் கொண்டாட எங்கள் இதயங்களைத் தயார்படுத்தும் போது உம் மீது நம்பிக்கை வைக்கிறோம். ஆமென்.**

**திருவருகைக் காலத்தின் இரண்டாவது வாரம்: டிசம்பர் 10, 2023**
**மெழுகுவர்த்தியின் பெயர்: பெத்லகேம் மெழுகுவர்த்தி**
**திருவருகைக் கால இரண்டாவது வாரத்தின் கருத்து: அமைதி மற்றும் தயாரிப்பு**
**மெழுகுவர்த்தி நிறம்: ஊதா**

**திருவருகைக் காலத்தின் இந்த இரண்டாவது வாரத்தில், நாம் நமது வாழ்க்கையைப் பற்றி சிந்தித்து, இயேசுவின் வருகைக்கான தயாரிப்பில் நம்மை நாமே சிறந்த பதிப்புகளாக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறோம். யோசேப்பும் மரியாவும் நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்குச் சென்ற பயணத்தை நமது நினைவில் நிறுத்துவோம்.**

**முதல் மற்றும் இரண்டாவது ஊதா நிற மெழுகுவர்த்திகளை ஏற்றி வைக்கவும்**

**இறைவார்த்தை:**
**தாவீதின் வழிமரபினரான யோசேப்பு, தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு, பெயரைப் பதிவு செய்ய, கலிலேயாவில் உள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார். (லூக்கா 2:4-7)**

**மௌனமாகச் சிந்திப்போம்.**

**மன்றாட்டு:**
**அன்புள்ள இயேசுவே, நீர் அமைதியின் இளவரசராகக் கிறிஸ்துமஸ் அன்று எங்கள் உலகில் நுழைந்தீர். இந்தத் திருவருகைக் காலத்தில் எங்களை சிறந்த பதிப்பாக மாற்றிட நாங்கள் முயற்சி செய்யும்போது, ஆழ்ந்த மற்றும் நிலையான அமைதி எங்களை நிரப்புகிறது. அந்த அமைதியை நாங்கள் சந்திக்கும் அனைவருடனும், குறிப்பாக மிகவும் உதவித் தேவைப்படுவோருடன் பகிர்ந்து கொள்ள உதவி செய்வீராக. ஆமென்.**

**திருவருகைக் காலத்தின் மூன்றாவது வாரம்: டிசம்பர் 17, 2023**
**மெழுகுவர்த்தியின் பெயர்: மேய்ப்பனின் மெழுகுவர்த்தி**
**திருவருகைக் கால மூன்றாவது வாரத்தின் கருத்து: மகிழ்ச்சி**
**மெழுகுவர்த்தி நிறம்: இளஞ்சிவப்பு**

**இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கின்ற இந்த மூன்றாவது மெழுகுவர்த்தி, மகிழ்ச்சியைக் குறிக்கிறது. திருவருகைக் காலத்தின் மூன்றாவது வாரத்தில், நெருங்கி வருகின்ற இயேசுவின் பிறப்புக்காக நாம் மகிழ்ச்சியில் நிறைந்துள்ளோம். இந்த ஞாயிறு பெரும்பாலும் "மகிழ்ச்சி ஞாயிறு" என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இயேசுவின் பிறப்பில் இடையர்கள் உணர்ந்த மகிழ்ச்சியை நாம் பிரதிபலிக்கிறோம்.**

**முதல் மற்றும் இரண்டாவது ஊதா நிற மெழுகுவர்த்திகளையும் மற்றும் இளஞ்சிவப்பு மெழுகுவர்த்தியையும் ஏற்றி வைக்கவும்.**

**இறைவார்த்தை:**
**இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பிச் சென்றார்கள். அவர்களுக்குச் சொல்லப்பட்டவாறு எல்லாம் நிகழ்ந்திருந்தது. (லூக்கா 2:20)**

**மௌனமாகச் சிந்திப்போம்.**

**மன்றாட்டு:**
**அன்புள்ள இயேசுவே, இந்தப் பரபரப்பான திருவருகைக் காலத்தில் உம் மீது கவனம் செலுத்த எங்களுக்கு உதவி செய்வீராக. எங்கள் வாழ்க்கையில் நீர் கொண்டு வரும் மகிழ்ச்சியை நாங்கள் அறிந்திருக்கிறோம். அன்றாடத் தருணங்களில் உம்மைக் கண்டுணர்ந்து, கிறிஸ்து பிறப்பு நாள் அன்று உமது அன்பின் குடிலுக்கு நன்றியுடன் வர விரும்புகிறோம். ஆமென்.**

| |
|---|
| **திருவருகைக் காலத்தின் நான்காவது வாரம்: டிசம்பர் 24, 2023**<br>**மெழுகுவர்த்தியின் பெயர்: வானத்தூதரின் மெழுகுவர்த்தி**<br>**திருவருகைக் கால நான்காவது வாரத்தின் கருத்து: அன்பு**<br>**மெழுகுவர்த்தி நிறம்: ஊதா** |

**திருவருகைக் காலத்தின் இந்த இறுதி வாரத்தில், கடவுள் நம்மீது வைத்திருக்கும் முடிவில்லாத அன்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம், கடவுளின் இந்த பேரன்பு, அவருடைய திருமகனின் பிறப்பில் வெளிப்படுகிறது. கிறிஸ்து பிறப்பு விழா அண்மித்திருக்கின்ற இந்தக் கட்டத்தில், கபிரியேல் வானதூதர் வழியாக நமக்கு அறிவிக்கப்பட்ட கடவுளுடைய அன்பின் நற்செய்தியைக் குறித்து சிந்திக்கவும், தியானிக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.**

**நான்கு மெழுகுவர்த்திகளையும் ஏற்றி வைக்கவும்**

**இறைவார்த்தை:**
**வானதூதர் அவர்களிடம், "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக்கா 2:10-11)**

**மௌனமாகச் சிந்திப்போம்.**

**மன்றாட்டு:**
**அன்பான இயேசுவே, உமது அன்பின் ஒளி எப்போதும் எங்கள் இதயங்களில் பிரகாசிக்கட்டும். கிறிஸ்மஸ் நெருங்கி வரும் வேளையில், எங்கள் மீது நீர் வைத்திருக்கும் அதீத அன்பைக் கண்டு வியக்கிறோம். உமது அன்பு எங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் மாற்றி, நாங்கள் சந்திக்கும் அனைவரையும் தொடட்டும். இயேசுவே, எங்கள் இதயங்கள் உமக்காகத் திறந்திருக்கின்றன. ஆமென்.**

**தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். - (யோவான் 3:16)**

